ஏற்படுத்தியிருக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பாலத்தினுடைய விரிவான திட்ட அறிக்கையை உடனடியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, போதும் உட்காருங்கள்; அரசின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

(இ) அண்ணா நகர் தொகுதி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள்.

திரு. எம்.கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணியடித்து விடாதீர்கள்; நான் சீக்கிரமாகப் பேசி முடித்துவிடுகிறேன். நான் எனது கன்னிப் பேச்சை தொடங்குவதற்கு முன் எனது பெருமைமிகு பெற்றோர்களான திரு. கோதண்டபாணி நாயுடு–திருமதி கிருஷ்ணவேணி அம்மாளுக்கு எனது வணக்கத்தையும், மரியாதையையும் செலுத்துகின்றேன். இத்தருணத்தில் என்னை இச்சட்டமன்றத்தில் அமர வைத்த தமிழினத்தின் மூத்த தலைவரும், சட்டமன்றத்தில் தொடர்ந்து வெற்றிப் பெற்று வைரவிழா கண்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் சகோதரர் திரு. அன்பழகன் அவர்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைத் தேர்ந்தெடுத்த எனது அண்ணா நகர் தொகுதி மக்களுக்கும், எங்கள் பகுதி கழக நிருவாகிகள் மற்றும் ஏனைய தோழமைக் கட்சித் தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தந்தை பெரியார், கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்கள், எங்கள் இனமான பேராசிரியர், எங்கள் செயல் தலைவர் அண்ணன் தளபதி உள்ளிட்ட எல்லா அரசியல் தலைவர்களும் எங்கள் இல்லத்திற்கு வந்து சென்றுள்ளனர். எனது தந்தையைப் போலவே நானும் பொது வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவன். எனக்கு இளமை பருவத்திலிருந்தே அரசியல் ஆர்வம் அதிகம். நான் கலைஞர் அவர்களால் கவரப்பட்டு,

என்னை திராவிட முன்னேற்றக்கழகத்தில் இணைத்துக்கொண்டேன். 1976 ஆம் ஆண்டு முதல் தி.மு.க.வின் இளைஞர் அணியில் இணைந்து பணியாற்றி வருகிறேன். எங்கள் தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா நகர் தொகுதியில் இரு முறை போட்டியிட்டபோது, அவரது வேட்பு மனுவை முன்மொழிந்தது எனது தந்தையார் அவர்கள்தான். அதன் தொடர்ச்சியாக திரு. சோ.மா. ராமச்சந்திரன் அவர்கள், அவரைத் தொடர்ந்து எங்கள் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், அதனை அடுத்து மூன்று முறை முன்னாள் அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் ஆகியோருக்கு தேர்தலில் பணியாற்றியுள்ளேன். இப்படி 1977 முதல் 2017 வரை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எம்.கே. மோகன், நீங்கள் பேசவில்லை என்பதற்காகத்தான் உங்களைப் பேச அனுமதித்தேன். (குறுக்கீடு) நீங்கள் இதுவரை உரையாற்றவில்லை என்பதற்காகத்தான் உங்களைப் பேச அனுமதித்தேன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எம்.கே. மோகன்: *சுமார் 40 வருடங்களாக அண்ணா நகர் தொகுதியில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளேன். தளபதி அவர்களால், 1996 முதல் 2001 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். குடிநீர் வாரிய உறுப்பினராகவும், பச்சையப்பன் அறக்கட்டளையின் உறுப்பினராகவும், விசாகப்பட்டினம் துறைமுக உறுப்பினராகவும், திருப்பதி தேவஸ்தான உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எம்.கே. மோகன், நீங்கள் உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைப் பற்றி சொல்லுங்கள்.*

திரு. எம்.கே. மோகன்: *முதலில் எனது தொகுதியின் தேவைகளைத் தெரிவிக்கின்றேன். அறிஞர் அண்ணா ஒரு சிறந்த படிப்பாளி. அதனால், அவர் பெயர் தாங்கிய தொகுதியில் அவர் பெயரால் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டும். எங்கள் தலைவர் அவர்களின் 94 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டும், கலைஞரின் சட்டமன்ற வைர விழாவை முன்னிட்டும், எனது தொகுதியில் அரசாங்கத்தின் காலியிடங்கள் உள்ளன. அதில் ஏதாவது ஓர் இடத்தில் பொறியியல் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டும். மேற்படி இரண்டு கல்லூரிகள் அமைப்பதற்கு அரசு உடனடியாக ஒப்புதல் அளிக்குமானால், நான் எனது சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் நிதி அளிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிலம்கூட கொடுக்கிறேன் என்று நீங்கள் என்னிடம் சொன்னீர்கள். அதையும் பதிவு செய்கின்றேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள். (குறுக்கீடு) திரு. எம்.கே. மோகன் பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) அதைத்தான் தருகிறேன் என்று சொன்னீர்கள் அல்லவா, அதையும் பதிவு செய்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. எம்.கே. மோகன்: ABBOY *அறக்கட்டளை. தமிழகத்தில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில்,* ABBOY *அறக்கட்டளைமூலம் 14 அரசு பள்ளிகளில் 145 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது, திருவண்ணாமலை மாவட்டம் வல்லத்தில் இயங்கிவரும் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எம்.கே. மோகன், அண்ணா நகர் தொகுதியில் கல்லூரி அமைத்துக் கொடுத்தால், 'நான் 7 ஏக்கர் நிலம் இலவசமாக தருகிறேன்' என்று நீங்கள் என்னிடம் சொன்னீர்களல்லவா? அதையே இன்னொரு முறை சொல்லுங்கள், போதும்; உட்காருங்கள்.*

திரு. எம்.கே. மோகன்: *7 ஏக்கர் நிலம் நன்கொடையாக தருவதாகச் சொன்னது திருவண்ணாமலை மாவட்டத்திற்கு. அண்ணா நகர் தொகுதியில் கல்லூரிகள் கட்டிக் கொடுத்தால், ஒரு கோடி ரூபாய் நிதி தருகிறேன். அதற்கு நான் உறுதியளிக்கிறேன்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

எனது தொகுதியில் இருக்கும் பூங்காக்களை மேம்படுத்த வேண்டும். குறிப்பாக டவர் பூங்காவினுள் ஒரு நீச்சல் குளம் அமைக்கப்பட வேண்டும். பொது மக்கள் மேலே சென்று பார்க்கின்ற வகையில் தகுந்த பாதுகாப்புடன் டவர் கோபுரம் திறக்கப்பட வேண்டும்.

எனது தொகுதியில் அமைந்தகரை–பச்சையப்பன் கல்லூரிக்கிடையே அமைந்துள்ள டோல்கேட் பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2017 ஜூலை 19] [திரு. எம்.கே. மோகன்]

எனது தொகுதியில் உள்ள ஷெனாய் நகர் ஸ்கேட்டிங் பார்க் பகுதி வழியாக செல்லும் அனைத்து வழித்தட பேருந்துகளும், ஷெனாய் நகர், புல்லா அவென்யு, ஸ்கேட்டிங் பார்க் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது தொகுதியில் அமைந்துள்ள Peripheral *மருத்துவமனை, ஓர் உயர் ஆராய்ச்சி சிறப்பு நிறுவனமாக மேம்படுத்தப்பட வேண்டும். புற்று நோய்க்கு உலகத் தரம் வாய்ந்த சிகிச்சையை நவீன வசதிகளுடன் இலவசமாக வழங்கும் விதமாக இம்மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும்.*

எனது தொகுதிக்குட்பட்ட MMDA *பகுதியில் ஈமச்சடங்கு நடத்திட இடவசதி ஏற்பாடு செய்துதர வேண்டும்.*

எனது தொகுதிக்குட்பட்ட அரும்பாக்கத்தில் பெருமாள் கோயில் தெரு மற்றும் விநாயகபுரம் தெருக்களில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, மிக்க சந்தோஷம். நன்றி, உட்காருங்கள்.*

முற்பகல் 10–15

(ஈ) ஆயிரம் விளக்கு தொகுதி, கால்வாய்கள் மற்றும் கூவம் ஆற்றைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.*

***திரு. கு.க. செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதியிலுள்ள, மாம்பலம் கால்வாய், திருமலை சாலை, கங்கைக்கரைபுரம், ஜி.என். செட்டி சாலை, தாமஸ் சாலை மற்றும் நந்தனம் வரையுள்ள கால்வாய் திறந்த நிலையில் உள்ளதால், துர்நாற்றம் வீசுவதோடு, நோய் பரவும் அபாயமும் உள்ளது. அதேபோன்று கூவம் ஆற்றைத் தூர் வார வேண்டுமென்று கேட்டு 8–5–2017 அன்று தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளிடம் கடிதம் கொடுத்திருக்கிறேன். அதனடிப்படையில் வேலை நடைபெறுகிறது. கூவம் ஆற்றைச் சுத்தப்படுத்தி, முகத்துவாரம் வரையுள்ள அடைப்புகளை அகற்றி, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*